



# குர்ஆன் வரலாற்றுச் சலவாத்து

மௌலவி எம். ஏ. மக்பூல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குர்ஆன் வரலாற்றுச் ஸலவாத்து

ஆக்கியோன்

மௌலவி எம். ஏ. மக்பூல்

S. A. R. M. Seyed Hassen Moulana
NINTAVUR – 1
SRI LANKA.

வெளியீடு:-

இஸ்லாமிய இலக்கியக் கழகம்

நிந்தவூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இஸ்லாமிய இலக்கியக் கழக வெளியீடு

முதற் பதிப்பு: மே 1984 விலை ரூ 5/.00

*

# QURAN VARALATTU SALAVATTU

AUTHOR: **Moulavi M. A. MAGBOOL**

NINTAVUR-I

★

Published by

**Islamic Literary Association**

NINTAVUR

FIRST EDITION

**1984**

Price Rs. 5/-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

வல்ல அல்லாஹ் எவ்வேளையும் என் உடல்
நலத்தையும் மனத்தூய்மையையும், உயர்
கல்வி அறிவையும், பரிசுத்த நல் அமல்க
ளைச் செய்ய நேர்வழி காட்டும் படியும்,
வல்ல அல்லாஹ்வையே வேண்டி,
எனது தாய் உம்மு குல்தூமுக்கும்,
தந்தை முஹம்மது மீரா சாஹிபு
ஆலிமுக்கும் இப்பா முற்றுஞ்
சமர்ப்பணமாக்கியருள்
வாயாக. ஆமீன்
யாறப்பல் ஆலமீன்.

எம். ஏ. மக்பூல் ஆலிம்
நிந்தவூர்-1.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருக்குர்ஆன் வாழ்த்து

''இன்னல்லாஹ'' என்றே குர்-ஆனிலே ஏகன் ஆயத்திறக்
கியதன் பயன்

சொன்னேன் யானும், மலக்குகள் யாருமெந்தூதர் மீதிற்
சொலுஞ் ஸலவாத்தையே

பன்னியாரும் இயம்புங்கள் ஒன்றிற்குப் பத்துயான் உரைப்
பேன் என்றதாலது

தன்னை யோதினர் நாளு முஹம்மது ஸல்லல்லாஹு அலைஹி
வஸல்லமே.

சலவாத்துப் பாட்டு

நிட்சயமாக அல்லாஹ்வும், அவனுடைய அமரர்களும் நபியின்மீது ஸலவாத்துச் சொல்கிறார்கள். ஆகவே! விசுவாசிகளே!! நீங்களும் அவர்கள் மீது ஸலாவாத்துச் சொல்லி, ஸலாமும் கூறிக்கொண்டிருங்கள்.

(திருக்குர்-ஆன் 33.56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்புரை

இஸ்லாமிய இலக்கியக்கழக வெளியீடாக மலரும் ''குர்ஆன் வரலாற்றுச் சலவாத்து'' எனும் நூல் முஸ்லிம் மக்கள் யாவருக்கும் பயனுடையதாகும். இஸ்லாமிய இலக்கியக்கழகக் குழுவினராகிய நாம் நமது பணிகளிற் சிறந்த ஒன்ருக இஸ்லாமிய இலக்கிய கலாச்சார நூல்களை வெளியிடுவதையும் ஏற்றுள்ளோம். நபி முஹம்மத் (ஸல்) அவர்கள் மேல் சலவாத்துச் சொல்வதின் பயனை நூலில் விளக்கிக் காட்டப்பட்டுள்ளது. இந்நூற்பயனை யாவரும் பெறவேண்டுமென்பது எமது எண்ணமாகும், இந்நூலாசிரியரான ஆலிஜனப். மௌலவி எம். ஏ. மக்பூல் அவர்களின் மார்க்க ஞான முதிர்ச்சியை இந்நூலில் படித்து மகிழ்கின்ருேம். நூலாசிரியரின் முன்னுரையும், சலவாத்தும், குறிப்புரையும் இப்பதிவின் சிறப்புக்களாகும். இந்நூலுக்கு அணிந்துரை வழங்கிய மௌலவி. எம். முஹையித்தீன் வாவா அவர்களுக்கும், இந்நூல் அமைப்பு சிறப்புற கருத்துரை வழங்கியும், நூல்பொருளை நுனித்தறிந்து சிறந்ததோர் மதிப்புரை வழங்கிய ஆலி ஜனப். எஸ். ஏ. ஆர். எம். செய்யிது ஹசன் மௌலாஞ அவர்களுக்கும், சிறப்புரை வழங்கிய எம். ஐ. ஆதம் பாவா அதிபர் அவர்களுக்கும் எமது பாராட்டுக்கள். இந்நூலை நன்முறையில் அச்சிட்டு உதவிய பசிபிக் அச்சக பணிப்பாளர் ரி. அப்துல் மஜீத் அவர்களுக்கும் எமது அகங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்ருேம். எமது ஆக்க பூர்வமான முயற்சிகள் வளர்ந்து பயன் தர அன்பர்கள் அனைவரையும் அகமலர வேண்டுகின்ருேம்.

இங்ஙனம் இஸ்லாமிய இலக்கியக் கழக
பிரசுரக் குழுவினர்
நிந்தவூர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறப்புரை

வல்ல அல்லாஹ்வையே முதலாவதாகத் துதித்து, ஸலவாத்தும் ஸலாமும் நம் நாயகம் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் மீதும் அன்னாரின் உற்றார், உறவினர், சுற்றத்தார், தோழமார், தொடர்ந்தோர்கள் மீதும் உண்டாவதாகவும்.

ஆலிஜனுப் எம். ஏ. மக்பூல் ஆலிம் அவர்களின் ''குர்-ஆன் வரலாற்றுச் ஸலவாத்து'' எனும் பாட்டைப் பார்வையிட்டேன். நமது இளம் சிறார்கள், வயோதிபர்கள், மாணவமாணவிகள் யாவருக்கும் பயனளிக்கக்கூடியதும், மனித வாழ்வின் தினசரி நிகழ்ச்சிகளில் சின்னஞ் சிறு பிரச்சினைகளைத் தீர்க்கவும், நிகழ்காலத்தையும் மறு உலக வாழ்க்கையையும், எதிர்காலத்தின் முன்னறி விப்புகளையும், அறபு மொழி தெரியாதவர்களின் உள்ளத்தைக் கவர்ந்து, உணர்வைக் கின்றிக் கிளறி, கண்களில் நீர் கசியச் செய்யும் ஓசை நயங் கொண்டதாயும் அமைந்துள்ளது. இவ்வரிய சேவையை அன்னார் அறபு ஆசிரியராகப் பணி புரிந்து, ஓய்வு பெற்று, பல இன்னல்கள் மத்தியில் இயற்றியிருப்பது அரும் பெரும் சாதனையாகும். எனவே! இப்பெரியாருக்கும் வருங் காலச் சந்ததிக்கும் நாம் செய்யும் நன்றி இப்பாவை நூல் வடிவாக்கி மக்கள் கரங்களில் தழைத்தோங்கச் செய்வதாகும், எனவே! மறுமைப்பயன் கருதி விசுவாசத்துடனும், அந்தரங்கச் சுத்தியுடனும் மக்கள் சமுதாயம் கரும மாற்றி இரு உலகிலும் நற்பயன் பெற வல்ல அல்லாஹ் எனக்கும், உங்களுக்கும், எம்பெற்றோர், மனைவி மக்கள், உலக மூமின், முஸ்லிம்கள் யாவருக்கும் நல்லருள் புரிவானாகவும். ஆமீன் வல்ஹம்துலில்லாஹி றப்பில் ஆலமீன்.

இவ்வண்ணம்

அல்ஹாஜ் எம். ஐ. ஆதம் வாவா
அதிபர்.
நிந்தவூர். 3.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபிமொழி

இறை மறை குர்-ஆன் என் மொழிகள்
இங்கே யான் விடும் இரு பொருட்கள்
திறமாய் அவற்றைப் பின் பற்றின்
தீங்கே இல்லை - நபி மொழியாம்.

கோமான் நபி மேல் ஒரு ஸலவாத்
கூறும் அன்பர் ஒரு வர்க்குச்
சீமான் இறைவன் பத்தாகச்
செய்வான் என்பது நபி மொழியாம்.

நூறு ஸலவாத் நாள் தோறும்
நுவலும் அன்பர் ஒருவர்க்குக்
கூறும் வறுமை இம்மையிலே
கூடாதென்பது நபி மொழியாம்.

அடிக்கடி ஸலவாத் தென்மீது
அனுப்பும் மனிதன் மறுமையிலே
பிடிப்புடன் என்னை நெருங்கிடுவான்
பெருமான் அருளிய நபி மொழியாம்.

நாற்பது நபி மொழி நினைவாக்கி
நலமாய் அவ்வழி நடந்திடுவோர்
ஏற்புடை உலமாக் கூட்டத்தில்
இருப்பார் என்பது நபி மொழியாம்.

இறையருட் கவிமணி
பேராசிரியர், கா. அப்துல் கபூர் **M. A.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நபிமணி வாழ்த்து

## தாஜுஸ் ஸலவாத்தின் தமிழாக்கம்

இறைவா ! எங்கள் பெருமானர்
ஏந்தல் முஹம்மது நபி மீது
குறையா தோய்க்கும் ஸலவாத்தைக்
குன்ரு தென்றும் சொரிந்தருள்வாய்

அண்ணல் மீதும் அவர் கிளேஞர்
அருமைத் தோழர் மீதெல்லாம்
வண்ணம் செறியும் ஸலவாத்து ஸலாம்
வாயே கமழ மொழிந்திடுவீர்.

★★
★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

சகல புகழும் அல்லாஹு-த் தஆலாவுக்கே. ஸலவாத்தும், ஸலாமும் நமது நாயகம் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் மீதும், அன்னூர் தோழமார், தொடர்ந்தோர் மீதும் உண்டாவதாக.

ஆலி ஜனூப். எம். ஏ. மக்பூல் ஆலிம் அவர்களின் ''குர்-ஆன் வரலாற்றுச் ஸலவாத்'' தைப் பார்வையிட்டேன். அது நமது இளம் சிறுர்கள் முதல், வயோதிபர்கள், மாணவ, மாணவிகள் யாவர்க்கும் பெரும் பயனளிக்கும் என்பதில் ஐயமில்லை.

பரிசுத்த குர்-ஆன் இறங்கிய வரலாறு, அதன் அமைப்புகளின் தொகுப்பு, ஓதும் ஒழுங்கு ஆகிய வற்றை உள்ளங்கை நெல்லிக்கனி போன்று தெளிவு படுத்துகின்றது. இத்தகைய அரியபணியைச் சிரமேற்கொண்டு தொண்டாற்றியுள்ள அப்பெரியாரவர்களுக்கு ஈருலகப் பாக்கியங்களையும் வல்ல அல்லாஹ் ஈந்தருள்வானாகவும். இப்பாவைப் படித்துணர்ந்து செயலாற்றுவதே நாம் அவருக்குச் செய்யும் நன்றியாகும்.

யாஅல்லாஹ் ! இந்நூலினால் மனித குலம் நற்பயன் பெற அருள் புரிவாயாக, ஆமீன்.

இவ்வண்ணம்

மௌலவி **M.** முகையதீன் வாவா
கிட்டங்கி வீதி,
நிந்தவூர், 4.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மதிப்புரை

'எல்லா உலகும் ஏகமாய்க்காக்கும் வல்லான்
உனக்கே வான்புகழ் அல்லாஹ்'

திருக்குர்ஆன் இவ்வுலக மாந்தர்க்கு அருளப்பட்ட இறைவேத மாகும். நபிமணி (ஸல்) அவர்களின் வாழ்வும், வாக்கும் அல்குர் ஆனுக்கு விளக்கமாகத் திகழ்கின்றன. திருக்குர்ஆனிலும், திரு நபி (ஸல்) அவர்கள் வாழ்விலும், வாக்கிலும் புலமை நிரம்பிய மௌலவி. எம். ஏ. மக்பூல் அவர்களால் ஆக்கப்பட்ட "குர்ஆன் வரலாற்றுச் ஸலவாத்து" என்னும் நூல் இஸ்லாமிய இலக்கிய வரிசையில் இடம் பெறும் சிறப்பிற்குரியது. இந்நூலின் உள்ளடக்கம் திருக்குர்ஆனுக்கு நுழைவாயில் போன்று திகழ்கின்றது. உருவத்தில் சிறிதாக இருந் தாலும் கடுகு சிறிது காரம் பெரிது என்பதற் கேற்ப இந்நூல் பொருளும் பயனும் வானைப்போல் விரிவடையும். வாழ்க்கையின் அனைத்துறை களுக்கும் அழகிய முன் மாதிரியாயமைந்த அண்ணலார் முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் சீரிய கூரிய தீஞ் சொற்களும், வனப்புறு வாழ்க் கையும் மணிமிடை பவளமாகக் கலந்துள்ளன.

ஸலவாத்துப்பாட்டுகளில் அமைந்துள்ள சொன்மணி மாலைகள் ஒவ்வொன்றும் ஈரடிகளில் அமைந்துள்ளன. ஒவ்வொரு பாட்டின் முடி விலும் ஸலவாத்துச் சொல்லப்படுகின்றது. ஈரடிகளில் அமைந்துள்ள "குர்ஆன் வரலாற்றுச் ஸலவாத்து" ப் பாட்டுக்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு சரித்திரம் ஒளி விட்டுக் கொண்டிருக்கிறது. நிகழ்ச்சிகளைக் கோவையாகச் சொல்லிக் கொண்டே செல்லுகையில் முத்துச் சரங் களுக்கு ஊடே ஓடும் சரடு போன்றுதான் இருக்கிறது ஆலிம் அவர்கள் அமைத்திருக்கும் லட்சியப்பாதை.

ஒவ்வொரு பாட்டின் மேம் பாட்டிலும் உள்ளம் குழையப்பாடி ஸலவாத்துச் சொல்லும் நடைப் பாங்கு ஆலிம் அவர்களின் நெஞ்சம் நிறைந்த பக்தியுணர்வை வெளிப்படுத்துகின்றது. இவரது அருளில் பழுத்து ஒழுகும் இஸ்லாத்தின் கனிரசமாம் குர்ஆனின் குரல் ஆலிம் அவர்களின் உள்ளத்தை ஆள்கின்றது. இந்நூலில் திருக்குர்ஆன் அமைப்பு முறை ஒழுங்கை விளக்கி அதனை ஓதும் மக்களுக்கு இலகு வாக்கி விளக்குகின்றார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''ஒரு நூற்றுப் பதிநான்கு சூருக்கள்

ஒருங்காய் அமைந்துள்ளது வஸல்லிம்'' (அல்லாஹூம்மஸல்லி)

எனத்தொடங்கி திருக்குர் ஆன் அருளப்பட்டதை ஸலவாத்துக்கள் தோறும் பாடி வரிசைப் படுத்துகின்றார்கள். அல்லாஹ்வுக்கு அழகிய திருநாமங்கள் இருப்பது போன்று திருக்குர்ஆனுக்கும் பல பெயர்கள் உண்டு. அதனை

''திருமறை நாமங்கள் முப்பத்தாறையும்

தீர்க்கமாய்க் கேட்டறிவீர் வஸல்லிம்'' (அல்லாஹூம்மஸல்லி)

என்னும் பாட்டைத் தொடங்கும் போது அல்-குர்ஆனின் திருநாமங்கள் யாவை என்பதையும், அவற்றின் பொருள் என்ன என்பதையும் தொடர்ந்து வரும் பாட்டில் உணரவைக்கின்றார் நூலாசிரியர். ஸலவாத்தின் பெருமையை உணர்ந்து பாடியதன் மூலம் சான்றோர் வரிசையில் இடம் பெறும் மௌலவி அவர்களின் பிரார்த்தனையும் நமக்கு அன்னாரின் மேதகவை எடுத்து விளங்குகின்றது.

''ஈருலகும் நல் வாழ்வையே எங்களுக்கு

ஈந்தருள் புரிந்திடுவாய் வஸல்லிம்'' (அல்லாஹூம்மஸல்லி)

''உலகாசையை நீக்கி என் இதயத்தை

உன் உறைவிடமாக்கியருள் வஸல்லிம்'' (அல்லாஹூம்மஸல்லி)

இந்நூலில் காணப்படும் பிரார்த்தனைப் பகுதி எல்லோருக்கும் நல்லறிவுச்சுடர் கொளுத்துகின்றது. மற்றவர்களுக்கும் எதனை இறைவனிடத்தில் கேட்டுப் பிரார்த்திக்க வேண்டும் என்னும் அறிவை வழங்குகின்றது.

தமிழ் மொழியில் புதிய செய்யுட்களும், இசைப் பாடல்களும் இப்போது பல்கிப் பெருகியுள்ளன. அவற்றுள் முஸ்லிம்கள் மத்தியில் ஸலவாத்துப் பாடல்கள் நன்மதிப்புப் பெற்றுள்ளன. ஸலவாத்துப் பாட்டிற்கு ஓசையையே மிகவும் முக்கியமாகக் கொள்ள வேண்டும். அறபியில் பாடப்படும் ஸலவாத்து இசைக் கேற்ப முஸ்லிம்கள் ஸலவாத்து இசைத்து மகிழ்கின்றார்கள். ஸலவாத்துச் சொல்வதின் மகிமை குர்ஆனிலும், ஹதீஸிலும் மிகப்பரந்து பேசப் படுகின்றது. மூமின்கள் அண்ணலார் மீது ஸலவாத்துரைத்தல் என்பது அவர்கள் மீது அன்பு காட்டுவதும், அவர்களின் வழியைப் பின்பற்றுவதும், அவர்களை வாயினிக்க, நெஞ்சினிக்க வாழ்த்துவதுமாகும். இந்நூலை வாய் விட்டுப் படிப்போர்கள் ஸலவாத்துப் பாடும் ஓசையமைதியை- சந்தக்குளிறைப்பின் பற்றிப் பாடுதல் வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூலில் உள்ள நூற்று எண்பது பாட்டுக்களும் ''அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மத்-யா றப்பி ஸல்லி அலைஹி வஸல்லிம்'' எனத் தொடர்ந்து பாடப்படும் முறையில் நமது நாயகம் முஹம்மத் நபி (ஸல்) அவர்களுக்குச் ஸலவாத்துச் சொல்வதினால் பெறும் பெரும் பேற்றினைப் படிப்போருக்கு வழங்கச் செய்துள்ளார்கள் ஆலி ஜனுப் எம். ஏ.மக்பூல் ஆலிம் அவர்கள். சங்கைமிகு ஸலவாத்தின் மகிமையை அன்பு கனிந்து பாடும் போழ்து.

அல்லாஹ் திருத்தூதர் அஹ்மத் நபிமணிமேல்

சொல்லும் ஸலவாத்து தூய்மைதரும் — எல்லோர்க்கும்

எண்ணரிய நன்மை இறையருள்வான் எஞ்ஞான்றும்

கண்ணியத்தைப் பெற்றிடுவார் காண்.

எனும் கவிதை வெண்பாவை எழுதுவதன் மூலம் கற்போர்க்கு விருந் தளிக்கின்றேன்.

'அண்ணலார் (ஸல்) அவர்கள் மீது ஒரு தடவை ஸலவாத்துச் சொல்வோர் மீது இறைவன் பத்துத் தடவைகள் — இன்னொரு அறிவிப் பின்படி எழுபது தடவைகள் ஸலவாத்துச் சொல்கிறான். ஸலவாத்துச் சொல்வோரின் பத்துக் குற்றங்களை மன்னிக்கிறான். ஸலவாத்துச் சொல்வோர் கியாமத்து நாளில் நாயகத்துடன் மிகவும் நெருங்கி இருப்பார்கள். கடைசி நாளின் கொடுமைகளில் இருந்து தப்பித்துக் கொள்வார்கள். அர்ஷின் நிழலில் இருப்பார்கள். ஸலவாத்துச் சொல்வது ஸதகாவின் இடத்தைப் பெறுகிறது. துஆக்களைப் பாது காக்கிறது. பாபங்களுக்குப் பரிகாரமாகும். அமல்களைத் தூய்மை யாக்கும், மனக்குழப்பத்தை நீக்கும், தறஜாவை உயர்த்தும். நரக நெருப்பிலிருந்து விடுதலை நல்கும். ஹவ்லுல் கௌதர் நீரினை அருந்தும். பெருமானார் அவர்களின் பரிந்துரைக்கும் உரியவராக்கும். உடைமை களில் வளர்ச்சியுண்டாக்கும். தேவைகளை நிறைவேற்றும் அவையை அலங்கரிக்கும், மக்கள் மனதில் அன்பைப் பெருக்கும் பிறரால் குறை கூறப்படுவதில் இருந்து பாது காப்பளிக்கும். பிறநற் செயல்களில் ஈடு படத்தூண்டும். அண்ணலார் அவர்களைக் கனவில் காணும் பேற்றினை நல்கும் அழிவைத்தடுக்கும். உள்ளொளி பெருக்கும் உயர்வைக்கொடுக் கும். நாயகத்தின் நேயத்தையும், இறைவனின் பொருத்தத்தையும் வழங்கும். இவ்வாறு மட்டில்லா நன்மைகள் செறிந்துள்ள இப்புதையலை நாம் கொள்ளையிடவேண்டாமா? ஐவேளைத் தொழுகையின் பின்னர் ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையில் ஒரு குறிப்பிட்ட ஸலவாத்தை வழக்க மாக்கிக் கொள்வோம். எங்கும் எந்நேரத்திலும் ஸலவாத்து உடன் பாடாகையால் ஓய்வு நேரங்களிலெல்லாம் ஸலவாத்துரைத்து உயர் வடைவோம் வல்லஅல்லாஹ்வின் அருள் பெறுவோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்நூல் கல்வி கற்கும் மாணுக்கர் இஸ்லாம் பாட நெறி நூல்களை நன்கு விளங்கிக் கொள்ளவும் உதவும். இந்நூலின் இறுதியில் அறபிச் சொற்களுக்குக் கொடுக்கப்பட்டுள்ள அருஞ் சொற் பொருள் விளக்கம் கருத்துத் தெளிவு கொடுப்பதாயமைந்துள்ளது பாராட்டத்தக்கது. பேராசிரியர் கா. அப்துல் கபூர் அவர்களுடைய ''நபி மொழி'' பற்றிய கவிதைகள் அணிசெய்வதும் ஒரு சிறப்பாகும்.

காலி கோட்டையில் அமைந்துள்ள ''பஹ்ஜத்துல் இப்ருஹீமிய்யா'' அறபிக் கல்லூரியில் பயின்று மௌலவிப் பட்டம் பெற்ற ஆலிஜனுப் எம். ஏ. மக்பூல் ஆலிம் அவர்கள் அறபு ஆசிரியராகக் கடமையாற்றி ஓய்வு பெற்றுள்ளார்கள். குத்பாப் பிரசங்கம், மார்க்க உபந்நியாசம் என்பன நிகழ்த்தும் இவர்கள் நிந்தவூர் ஜும்ஆப் பள்ளிவாசல் பேஸ் இமாமாகவும் பணிபுரிந்துள்ளார்கள். இறையருட் பணிக்கு இனிதின் ஆளாகும் அன்னாரின் நூல் யாவர்க்கும் பெரும் பயன் நல்குவதாகும். இந்நூற் பிரார்த்தனைகளில் வரும் பெரும்பேற்றினை ஈருலகிலும் எம். ஏ. மக்பூல் ஆலிம் அவர்களுக்கும், எமக்கும் ஈந்தருளுமாறு எல்லாம் வல்ல அல்லாஹ்வைப் பிரார்த்திக்கின்றேன்.

''ஆர்வ நபிகள் அருங்கிளை மீது
சார்க ஸலவாத்தும் ஸலாமும் அல்லாஹ்''

வண்மை நபி நாயகத்தின் வாக்கமுதம் உட்கனிந்து
எண்ணுமக்பூல் ஆலிம் இயம்பு மிந்நூல் — கண்ணியஞ்
சேர்வான் மறையாம் குர்ஆனின் மாண்புரைக்கும்,
கற்றபேர் மேன்மைபெற வாழ்வார் விளம்பு.

திருக்குர்ஆன் உள்ளழகில் சிந்தை மகிழ்ந்து
அருள்கின்ற செஞ்சொல்லில் அஹ்மத் — திரு நபியை
வாயினிக்க, நெஞ்சினிக்க வாழ்த்து மக்பூல்
ஆலிம்பா நாயனருள் சேர்க்கும் நவில்.

திருக்குர்ஆன் வரலாற்றுச் ஸலவாத்து யாவருமே
திருத்தமுடன் மொழிவதற்கு சிறப்புடனே — யாத்தளித்த
திருவளரும் ஷறகுடை மக்பூல் ஆலிம் நடைப்பாங்கில்
திரு நபியின் புகழாரம் சிந்தை கொளச் செய்திடுமே.

இவ்வண்ணம்:-
எஸ். ஏ. ஆர். எம். செய்யிது ஹஸன் மௌலானு

இஸ்லாமிய இலக்கியக் கழகம்.
நிந்தவூர்.

**19.........1984**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

நித்தியமும் நீடூழியும் தரிபாடான வல் அல்லாஹ்வை முதலாவதாகத்துதித்து, நம் நாயகம் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் மீதும் அவர்களின் உற்றார், உறவினர், தோழமார்கள் மீதும் ஸலவாத்தும் சலாமும் கூறிய பின்னர் நம் நாயகம் முஹம்மத் நபி (ஸல்) அவர்களின் மட்டில்லா அற்புதமான திருமறைக் குர்ஆன் ஷரீபில் அடங்கியுள்ள பிரிவுகளை ஆய்வாளர்களின் பல நூல்களிலிருந்து தெரிந்தெடுத்து அல்லாஹ்வின் உதவியால் நம் சகோதர முஸ்லிம் மக்கள் சிறூர்கள் தொடக்கம், முதியோர்கள், மாணவ, மாணவிகள் வரை குர்ஆன் ஷரீபின் பிரிவுகளை அறிந்து மனனஞ் செய்யும் இயல்பை உத்தேசித்து, நம் நாயகம் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்துச் சொல்வதில் மட்டும் அல்லாஹ்வும், மலக்குகளும் உடன் பட்டிருப்பதாலும், நம் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்துச் சொல்வதில் மட்டில்லா மகிமையும், நன்மையும் இருப்பதாலும், ஒரு ஸலவாத்துச் சொல்பவனுக்கு பத்துப் பிரதிபலன் இருப்பதாலும், நம் ஆதிபிதா செய்யிதுனா நபி ஆதம் (அலை) அவர்களுக்குத் தன்மனைவியார் செய்யிதத்துனா ஹவ்வா (அலை) அவர்களுக்கு ''மஹர்'' கொடுப்பதற்குப் பத்து ஸலவாத்துச் சொல்வதை வல்ல அல்லாஹுத் தஆலா உத்தரவளித்திருப்பதாலும், நம் அண்ணல் நபி (ஸல்) அவர்களின் நாமத்தைக் கேட்டு ''ஸலவாத்துச் சொல்லாதவனைப் போன்று அசட்டையானவனும், உலோபியும் உலகில் யாருமிலர்'' எனக்கல்வி வல்லுணர்கள் கூறியிருப்பதாலும். நம் அண்ணல் நபி (ஸல்) அவர்கள் மீது ஸலவாத்துச் சொல்வதால் ஏற்படும் நன்மையையும் சிறப்பையும் பெற்றுக் கொள்ளும் ஒரே நோக்கத்தோடு கருணை மிக்க வல்ல அல்லாஹ்வின் உதவியால் ஸலவாத்துப் பாவாக யான் இசைத்து 'குர்ஆன் வரலாற்றுச் ஸலவாத்து' என நாமமிட்டு இயற்றியுள்ளேன். எனவே! இப்பாவைப் படிப்போர், கேட்டிருப்போர் யாவரும் ஒவ்வொரு பாட்டின் இறுதியிலும் ''அல்லாஹும்ம ஸல்லி அலா முஹம்மத், யாறப்பி ஸல்லி அலைஹி வஸல்லிம்'' எனக்கூறவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாஅல்லாஹ்! இப்பாவில் ஏற்பட்டுள்ள குறை, குற்றங்களை நீ மன்னித்தருள் புரிந்து, இப்பாவை நீ அங்கீகரித்து எனது பெற்றார்கள் இருவருக்கும் என்னில் நின்றும் அர்ப்பணமாக்கியருள்வாயாக. ஆமீன் வல்ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்.

இப்பாவை சரி, பிழை பார்ப்பவர்கள் பெருமனதுடன் பிழைகளைத் திருத்தும் படி வேண்டியும், ஆசையுடன் படிப்போர், உவப்புடன் கேட்டிருப்போர், சரி, பிழை பார்த்துதவி அணிந்துரை வழங்கிய ஆலிஜனுப் மௌலவி. எம் முஹைறயதீன் வாவா அறபு ஆசிரியர் அவர்களுக்கும், சிறப்புரை வழங்கிய ஆலிஜனுப் அல்ஹாஜ் எம். ஐ. ஆதம்வாவா அதிபர் அவர்களுக்கும். இஸ்லாமிய தமிழ் இலக்கியக் கழகப் பிரதம அமைப்பு நிர்வாகியும், மதிப்புரையும், கவிதை வெண்பாக்களும் நல்கியவரும், பேராசிரியர் கா. அப்துல் கபூர் அவர்களின் ''நபிமொழி'' எனும் கவிதைகளையும் ஈந்து உதவியும். நூல் அமைப்பு முறை ஆலோசனைகளையும் நல்கிய கவிஞர் ஆலிஜனுப். எஸ். ஏ. ஆர். எம். செய்யிது ஹஸன் மௌலானா ஆசிரியர் அவர்களுக்கும், இந்நூலை அச்சியியற்ற உதவிய சங்கைக்குரிய பொருளாளர்களுக்கும், அச்சியியற்ற உதவியோருக்கும் உளங்கனிந்த நன்றியைச் செலுத்தி, இரு உலகிலும் வல்ல அல்லாஹ் யாவருக்கும் நல்லருள் புரியும் படியும், கருணையும், கடாட்சமும் மிகுந்த வல்ல அல்லாஹ் நம்மனைவருக்கும் இரு உலகிலும் நல்லருள் தந்தருள்புரிவானாகவும். ஆமீன் வல் ஹம்து லில்லாஹி றப்பில் ஆலமீன்.

இவ்வண்ணம்
மௌலவி. எம். ஏ. மக்பூல்
நிந்தவூர்-1.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குர்ஆன் வரலாற்றுச் ஸலவாத்து

1. அல்லாஹும்ம ஸல்லி அலாமுஹம்மத்
யாறப்பி ஸல்லி அலைஹி வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி

2. அல்ஹம்து லில்லாஹி எனச் சொல்லி
அல்லாவையே துதிப்போம் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

3. தாஹா நபிமீது ஸலவாத்தும்
ஸலாமும் சொல்லி விடுவோம் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

4. மற்றும் நபிமார்களை மனதார
வாழ்த்தியே போற்றிடுவோம் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

5. ஆல் அஸ்ஹாபிகளை என்றும்
அன்பாகப் போற்றிடுவோம் வஸல்லிம் (அல்லாஹும்ம ஸல்லி)

6. கற்றோர்கள், மற்றோர்களை அதிகம்
கண்ணியப் படுத்திடுவோம் வஸல்லிம் (அல்லாஹும்ம ஸல்லி)

7. அன்புடன் ஏழைகள், சிறூர்களை
ஆதரித்து நடப்போம் வஸல்லிம் (அல்லாஹும்ம ஸல்லி)

8. நம் பெற்றோர்கள் உற்றூர்களை நிதமும்
நலம்பெற நாம் நடப்போம் வஸல்லிம் (அல்லாஹும்ம ஸல்லி)

9. திருமறைக் குர்ஆனையும், ஹதீஸையும்
தினமும் பின்பற்றிடுவோம் வஸல்லிம் (அல்லாஹும்ம ஸல்லி)

10. மறைபுர்கான் வேதம் நம் அண்ணலின்
மட்டில்லா அற்புதமே வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

11. ஆனைப்படை வருடம் நம்மள் நபி
அவதரித்திட்டவர்காண் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

12. அப்துல்லா, ஆமினாவும் நம் அண்ணலின்
பெற்றூர்கள் என்றறிவீர் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

13. மக்கத்துக் குறைஷியர்கள் அவ்வேளை
மக்களாய் வாழ்ந்தனர்காண் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

14. இளமைப் பருவத்திலே எங்கள் நபி
யெதீமாகி விட்டார்கள் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

15. நாள் ஒரு வண்ணமுமே எங்கள் நபி
வாலிப வயதடைந்தார் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

16. வயதிருபத்தைந்தினில் எங்கள் நபி
மணந்தார் கதீஜாவை வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17. அறபிக் குறைஷியர்கள் அஞ்சாரம்
அளவிற்கு மிஞ்சியது வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
18. கண்டு சஹிக்காமல் எங்கள் நபி
கவலையில் ஆழ்ந்து விட்டார் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
19. ஹிறுமலைக் குகைதனிலே தினமும்
தியானத்தில் ஈடுபட்டார் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
20. நம்பிக்கை உறுதியினால் நபியின்
நாற்பதாம் வயதினிலே வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
21. அருள் பொங்கும் றமழான் மாதமூவொன்பது
மதிதிங்கள் தினமதிலே வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
22. ஹிறுமலைக் குகைதனிலே ஜிப்ரீல்
இக்றஃ இயம்பச் சொன்னார் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
23. உம்மிய்யாயிருந்ததனால் எங்கள் நபி
ஓதத் தெரியாதென்றார் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
24. ஓதுவீரெனக் கூறி அண்ணலை
உரத்துக் கட்டியணைத்தார் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
25. மூன்றுமுறை ஜிப்ரீல் முஹம்மதை
முறுகக் கட்டியணைத்தார் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
26. இறைத்தூதர் கூறியதை அண்ணல் நபி
இனிமையாய் ஓதினர் காண் வஸல்லிம் (அல்லாஹும்ம ஸல்லி)
27. சூறத்து அலக்கிலுள்ள முதல் ஐந்து
ஆயத்தை ஓதினர் காண் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
28. அல்லாஹ்ற அருளுகையில் அட்சரந்தொனி
அறவே கிடையாது வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
29. இறைத்தூதர் கூறுகையில் அட்சரந்தொனி
உண்டானதென்றறிவீர் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
30. அலக் சூறு ஐந்தாயத்தும் நபித்துவ
ஆரம்பம் என்றறிவீர் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
31. மனப்பயம் கூடியதால் எங்கள்நபி
மனைவிஇல்லம் அடைந்தார் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
32. நடந்தவற்றைக் கூறியவர் மனைவியை
போத்திட வேண்டினர்காண் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
33. கம்பளத்தால் போத்தி அண்ணல்நபி
கண்ணுறங்கும் போதில் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
34. வறக்கத்தினிடஞ்சென்று கதீஜா
நடந்தவற்றைச் சொன்னார் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
35. முன்வேதக் கூற்றின்படி நுங்கணவர்
முர்ஸல் எனத்தேற்றினார் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

36. இறுதித்தீர்க்கத்தரிசியாய் நுங்கணவரை
இன்றே இறைதெரிந்தான் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

37. மக்காவில் சொற்பகாலம் இறைத்தூது
வராதிருந்தனவே வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

38. அவ்வேளை குறைஷியர்கள் அண்ணலை
அவமதித்துப் பேசினர்காண் வஸல்லிம் (அல்லாஹும்ம ஸல்லி)

39. பிரமாணஞ் செய்தபடி அல்லாஹ்வும்
இறக்கினன் மூஹ்றாகூருவை வஸல்லிம் (அல்லாஹும்ம ஸல்லி)

40. நுபுவ்வதின் பத்தாம் ஆண்டு கதீஜா
நாயனடி எய்தினர்காண் வஸல்லிம் (அல்லாஹும்ம ஸல்லி)

41. அக்காலை அபூதாலிபின் மரணமுமே
அளவில்லாக் கவலை யென்றூர் வஸல்லிம் (அல்லாஹும்ம ஸல்லி)

42. அடங்காத் துயரத்தினுல் துக்க ஆண்டென
அழைக்கவு மானூர்கள் வஸல்லிம் (அல்லாஹும்ம ஸல்லி)

43. அண்ணலின் துயரந்தீர்க்க அல்லாஹ்வும்
விண்ணுலகிற் கழைத்தான் வஸல்லிம் (அல்லாஹும்ம ஸல்லி)

44. எந்தநபிக்குமில்லாத அற்புதம்
ஏந்தலின் விண்யாத்திரை வஸல்லிம் (அல்லாஹும்ம ஸல்லி)

45. அமரர்களில் இருவர் நபிமுஹம்மதை
அழைத்துச் சென்றனர்காண் வஸல்லிம் (அல்லாஹும்ம ஸல்லி)

46. புருக்கதனிலேற்றி அல் அக்ஸாப்
பள்ளியடைந்தார்கள் வஸல்லிம் (அல்லாஹும்ம ஸல்லி)

47. ஏணிதனிலேற்றி நம் அண்ணலை
ஏழாம் வானம் வரையும் வஸல்லிம் (அல்லாஹும்ம ஸல்லி)

48. காணுத அதிசயங்கள் பற்பல
கண்ணுற்றூர் அண்ணல் நபி வஸல்லிம் (அல்லாஹும்ம ஸல்லி)

49. அல்லாஹ் உரையாடி ஐந்தொழுகை
அருட்கொடையாயளித்தான் வஸல்லிம் (அல்லாஹும்ம ஸல்லி)

50. மிஃறாஜ் சென்ற பின்னர் குறைஷிகள்
மிகைத்தனர் கொடுஞ்செயலில் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

51. அல்லாஹ்வும் அண்ணலரைப் பாதுகாப்பாய்
யத்ரிப் ஏகச் சொன்னுன் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

52. வாளுடன் காவலிருந்தோர் அறியாது
வள்ளல் நபி ஏகினர்காண் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

53. வயது ஐம்பத்து மூன்றில் அண்ணல் நபி
மதீனு அடைந்தார்கள் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

54. பிரயாணத் தோழனுக நபியுடன்
சித்தீகுஞ் சென்றனர்காண் வஸல்லிம் (அல்லாஹும்ம ஸல்லி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

55. இருபத்து மூன்றாண்டு திருமறை
இறங்கிய தென்றறிவீர் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

56. ஸுஹுபுகள் வேதங்கள் யாவையும்
சுருக்கினன் புர்கானில் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

57. மானிட சமுதாயத்தின் ஈருலக
வாழ்க்கைத் திட்டம் குர்ஆன் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

58. திருமறைப்படி நடந்தால் ஈருலகிலும்
திருப்தியைப் பெற்றிடுவீர் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

59. குர்ஆனின் உட்பிரிவு யாவையும்
உவந்து நாம் கற்றிடுவோம் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

60. ஒரு நூற்றுப் பதினான்கு சூறுக்கள்
ஒருங்காய் அமைந்துள்ளது வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

61. மக்காவில் பதிமூன்றாண்டு இறங்கியதை
மக்கிய்யா என்றறிவீர் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

62. மதீனாவில் பத்தாண்டு அருளியவை
மதனிய்யா என்றறிவீர் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

63. தேவைகளுக்கேற்ப சூறுக்கள்
சிறிது, பெரிதாகும் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

64. சிறியது மூன்றாயத்தும் பெரியது
இருநூற் றெண்பத்தாறும் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

65. மக்கிய்யா சூறுக்கள் எண்பத்தாறும்
மதினிய்யா இருபத்தெட்டும் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

66. ஆறாயிரத் தறுநூற் றறுபத்
தாறு திருவாக்கியங்கள் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

67. ஏவலுக் காயிரமும் அதே போன்று
விலக்கலுக் காயிரமே வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

68. வாக்களித்தல் ஆயிரம் அவ்வண்ணமே
ஆயிரம் அச்சுறுத்தல் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

69. வருணனை ஆயிரமும் நபிமார்கள்
வரலாறும் ஆயிரமே வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

70. இயல்பானதை விளக்கும் ஆயத்துக்கள்
இருநூற் றைம்பதாகும் வஸல்லிம் (அல்லாஹும்ம ஸல்லி)

71. இயல்பற்றதை விளக்கும் ஆயத்துக்கள்
இரு நூற்றைம்பதாகும் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

72. இறைத்துதி ஆயத்துக்கள் நிட்சயம்
ஒருநூறு என்றறிவீர் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

73. ''நாஸிஹ்'' ''மன்சூஹ்'' மாற்றல், பெயர்தல்
ஆயத்து அறுபத்தாறு வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

74. மாதமொன்றில் ஓதிமுடிப்போர்க்கு
வாகு ஜுஸூ முப்பதும் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

75. வாரமொன்றில் ஓதிமுடிப்போர்க்கு
வாய்ப்பாம் மன்ஸில்களேழு வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

76. நிஸ்பாக அமைந்தமுறை இருநேரம்
நிதமும் ஓதுவார்க்கு வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

77. உவப்பாய் மனனஞ் செய்வோர்க்கியல்பு
றுகூஉகள் என்றறிவீர் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

78. மற்றுமுள்ள பிரிவுகள் யாவும்
மனனஞ் செய்வோர்க்கியல்பு வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

79. மனனத்திற்கியல்பாக ஸுமுன், றுப்உ
மறு பெரும் பிரிவுகளாம் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

80. ஐநூற்று நாற்பத்தெட்டு றுகூஉகள்
அமைந்துள்ளது குர் ஆனில் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

81. இருநூற்று நாற்பது ஸுமுனுகள்
இயல்பாய் அமைந்துள்ளது வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

82. ஒருநூற்று இருபது றுபுஉகள்
ஒழுங்காய் அமைந்துள்ளது வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

83. அறுபது நிஸ்புகள் குர் ஆனின்
அனவரதப் பிரிவாம் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

84. கலிமாக்கள் எண்ணாயிரத் தறுநூற்று
நாற்பத்து மூன்றாகும் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

85. ஹர்புகள் மூன்று இலட்சத்திருபத்தோ
ராயிரத்திருநூற்று அறுபத்தேழு வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

86. அகர உயிர்க்குறிகள் ஐம்பத்திராயிரத்து
இருநூற்று நாற்பத்து மூன்று வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

87. இகர உயிர்க்குறி முப்பத்தொன்பதினாயிரத்து
ஐநூற்று எண்பத்திரெண்டு வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

88. உகர உயிர்க்குறிகள் எண்ணாயிரத்து
எண்ணூற்றி நாலாகும் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

89. அழுத்தல் குறியீடு ஆயிரத்திருநூற்று
ஐம்பத்து மூன்றாகும் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

90. நீட்டல் குறியீடு ஆயிரத்து
எழுநூற்றெழுபத் தொன்று வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

91. நுக்தாக்கள் ஒரு இலட்சத்தையாயிரத்து
அறுநூற்றெண்பத்து நாலு வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

92. திலாவத்துஸ் ஸஜதா பதினைந்து
திருமறை அமைப்பிலுண்டு வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

93. இத்திபாக்குஸ் ஸஜதா பதினுன்கும்
இடம்பெறும் தொழுகையிலே வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
94. இஷ்திலாபுஸ் ஸஜதா தொழுகையில்
இடம் பெறு தென்றறிவீர் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
95. ஷாபியீ இமாம் கூற்றின்படியாவையும்
சாற்றிடக்கேட்டறிவீர் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
96. சூறத்து ஸாதில் வரும் ஸஜதா மட்டும்
சுன்னத்தல்ல தொழுகையில் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
97. ''மனிதர்காள்'' என்றழைத்த வசனங்கள்
மக்காவில் அருளியது வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
98. ''விஸ்வாசிகாள்'' என்றியம்பும் வசனங்கள்
மதீனவில் அருளியது வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
99. ''அஊது'' சொன்னபடி குர்ஆனை
ஆரம்பித்தோதச் சொன்னுன் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
100. துப்பரவற்றோர்கள் குர் ஆனைத்
தொடலாகாதென்று சொன்னுன் வஸல்லிம்(அல்லாஹும்ம ஸல்லி)
101. இறுதி ஹஜ்ஜின்போது இறைவசனம்
இறுதியாய் இறங்கியது வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
102. குர் ஆனின் அசரியங்கள் யாவையும்
சூறுபாத்திஹாவில் அமைத்தான் வஸல்லிம்(அல்லாஹும்ம ஸல்லி)
103. பாத்திஹா சூறவின் அம்சங்களை
பிஸ்மியில் அடக்கியுள்ளான் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
104. பிஸ்மியின் சாரமதை பேயின்
நுக்தாவினில் அமைத்தான் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
105. ஓதத் தெரியாதோர் குர் ஆன் ஓதக்
கேட்டிடும் என்று சொன்னுன் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
106. முழுக்கு விதியானோர் குர் ஆனைத்தொட
ஓதமுடியா தென்றான் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
107. உழுவில்லா வேளைகளில் மனனமானோர்
ஓதலாம் என்றறிவீர் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
108. பாத்திஹாசூறுவின் பிஸ்மில் மட்டும்
பர்ளென்றார் ஷாபியீஇமாம் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
109. சூறத்துத்தௌபாவிற்கு அஊதுமட்டும்
சுன்னத் தென்றறிவீர் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
110. ஏனைய சூறுக்களை ஓதும் போது
அஊது, பிஸ்மி சுன்னத்தாம் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
111. திருமறை நாமங்கள் முப்பத்தாறையும்
தீர்க்கமாய்க் கேட்டறிவீர் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

112. அல்கிதாப், அல்குர்ஆன், அல்பயான்
அல்புர்கான், அல்ஹக்கு வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
113. அஃதிக்று, அன்னூறு, அல்ஹகீம்
அல்கரீம், அல்முகர்றமா வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
114. அல்முபீன், அல்முஸத்திக், அல்புர்ஹான்
அல்ஹுதா, அஷ்ஷிபா வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
115. அல்கையூம், அல்முஹைமின், அன்னிஃமத்
அர்றூஹு, அத்தன்ஸில் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
116. அல்ஹுக்மு, அல்முபாறக், அல்மஜீத்
அர்றஹ்மத், அல்மௌயிழா வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
117. அல்பஷீர், அன்னதீர், அல்அறபி
அல்அஸீஸ், அல்முதஹ்ஹறு வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
118. அல்மர்பூஆ, அஃதிக்று, அல்பஸாயிர்
அல்அஜப், அல்ஹிக்மா, ஹப்லுல்லாஹ் வஸல்லிம்.
(அல்லாஹும்ம ஸல்லி)
119. ஒருநூற்றுப் பதினாலு சூறுக்களை
ஒருங்கமையக் கற்றிடுவீர். வஸல்லிம் (அல்லாஹும்ம ஸல்லி)
120. அல்பாத்திஹா, அல்பகறு, ஆலஇம்றான்
அன்னிசா, அல்மாயிதா வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
121. அல்அன்ஆம், அல்அஃறுப், அல்அன்பால்
அத்தௌபா, யூனுஸ், ஹூது வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
122. யூசுபு, அர்றஃது, இப்றுஹீம்
அல்ஹஜர், அன்னஹ்லு வஸல்லிம் (அல்லாஹும்ம ஸல்லி)
123. பனூஇஸ்றுயீல், அல்கஹ்பு, மர்யம்
தாஹா, அல்அன்பியா வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
124. அல்ஹஜ்ஜு, அல்முமினூன், அன்னூறு
அல்புர்கான், அஷ்ஷுஅறு வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
125. அன்னம்லு, அல்கஸஸ், அல்அங்கபூத்
அர்றூமு, லுக்மானுமாம் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
126. அஸ்ஸஜதா, அல்அஹ்ஸாப், ஸபஉ
பாதிர், யாசீன், அஸ்ஸாபாத் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
127. ஸாது, அஸ்ஸுமர், அல்மூமின், ஹாமீம்ஸஜதா
அஷ்ஷுறு, அஸ்ஸுஹ்றுப் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
128. அத்துஹான், அல்ஜாதியா, அல்அஹ்காப்
முஹம்மது ஸல்லல்லாஹ் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
129. அல்பத்ஹு, அல்ஹுஜ்றுத், காபுகுறு
அஃதாரியாத், வத்தூர் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
130. அன்னஜ்மு, அல்கமறு, அர்றஹ்மான்
அல்வாகிஆ, அல்ஹதீத் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

131. அல்முஜாதலா, அல்ஹஸ்று அல்மும்தஹினு
அஸ்ஸப்பு, அல்ஜுமுஆ வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

132. அல்முனுபிகூன், அத்தகாபுன், அத்தலாக்
அத்தஹ்ரீம், அல்முல்கு வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

133. அல்கலம், அல்ஹாகா, அல்மஆரிஜ்
நூஹு, அல்ஜின்னுமாம் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

134. அல்முஸம்மில், அல்முதஸ்ஸிர், அல்கியாமா
அத்தஹ்று, அல்முர்ஸலாத் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

135. அன்னபஉ, அன்னுசிஆத், அபஸ
அத்தக்வீர், அல்இம்பிதார் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

136. அத்தத்பீப், அல்இண்ஷாக், அல்புறூஜ்
அத்தாரிக், அல்அஃலா வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

137. அல்காஷியா, அல்பஜ்று, அல்பலத்
அஷ்ஷம்ஸ், அல்லைல் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

138. அழ்ழுஹா, அல்இன்ஷிறுஹ், அத்தீன்
அல்அலக், அல்கத்று வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

139. அல்பையினு, அஸ்ஸில்ஸால், அல்ஆதியாத்
அல்காரிஆ, அத்தகாதுர் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

140. அல்அஸ்ர், அல்ஹுமஸா, சூறத்பீல்
சூறுகுறைஷ், அல்மாஊன் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

141. அல்கௌதர், அல்காபிறுன், அந்நஸ்று
அல்லஹபு, அல்இஹ்லாஸ் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

142. அல்பலக், அன்னுஸ், ஆகசூறு
ஒருநூற்றுப்பதினுலு வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

143. சட்டப்படி ஓதினல் குர்ஆன்
ஷபாஅத்துச் செய்திடுமே வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

144. றுகூஃஆகக்காலை, மாலை ஓதிவரின்
முடிவாகும் பத்தாமாதம் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

145. ஸுதுஸை நிதம் குர்ஆன் ஓதிவந்தால்
முடிவாகும் எட்டாமாதம் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

146. நிதமும் றுப்ஆக ஓதிவந்தால்
முடிவாகும் நாலாமாதம் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

147. நிஸ்பாக நாளாந்தம் ஓதிவரில்
இருமாதம் பூர்த்தியாகும் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

148. ஜுசுவாக அனுதினமும் ஓதிவந்தால்
முடிவாகும் ஒருமாதத்தில் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

149. குறைந்தபட்சம் ஆண்டிற்கிருமுறை
குர்ஆன் தமாம் சிறப்பாம் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

150. சகலவஸ்துவுக்கும் அகமுண்டு
சக்கில்லை என்றறிவீர் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

151. திருமறைக் குர்ஆனின் இதயம்
சூறத்து யாசீன் என்றார் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

152. மரணத்தறுவாயில் யாசீனை
மனதார ஓதிடுவீர் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

153. சூறத்துல் இஹ்லாஸ் குர்ஆனின்
மூன்றிலொன்றை ஒக்குமாம் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

154. மூன்றுமுறை இஹ்லாஸை ஓதினால்
குர்ஆன் முழுவதின் தவாபாம் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

155. தொழுகையல்லா வேளை ஓதுவோர்க்கு
தொகுத்த நன்மை ஹர்பிற்குப்பத்து வஸல்லிம்.
(அல்லாஹும்ம ஸல்லி)

156. தொழுகையில் ஓதுவோர்க்கு பதின்மடங்கு
தொகுப்பான நன்மையதாம் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

157. யாஅல்லாஹ்! உனதருளால் இச்சலவாத்தை
இயற்றினேன் ஏற்றுக்கொள்வாய் வஸல்லிம்.
(அல்லாஹும்ம ஸல்லி)

158. ஈருலகும் நல்வாழ்வையே எங்களுக்கு
ஈந்தருள் புரிந்திடுவாய் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

159. உலகாசையை நீக்கி என் இதயத்தை
உன் உறைவிடமாக்கியருள் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

160. மறைபுர்கான் பொருட்டால் மக்பூலின் பிழை
மன்னித்தருள் புரிவாய் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

161. என்பெற்றார்கள், மனைவிமக்கள் பிழைகளை
பொறுத்தருள் புரிந்திடுவாய் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

162. உற்றார் உறவினர்கள், உலக முஸ்லிம்
யாவரையும் மன்னித்தருள் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

163. என்பெற்றார்கள் இருவருக்கும் இப்பாவை
அர்ப்பணமாக்கியருள் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

164. இப்பாவை சரி, பிழைபார்ப்பவர்க்கும் ஈருலகில்
வெற்றியளித்தருள்வாய் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

165. அச்சிட உதவியோர்க்கும் யாஅல்லாஹ்!
நற்சிறப்பூட்டியருள் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

166. படிப்போர்கள், கேட்போர்கள் பிழைகளை
மன்னித்தருள் புரிவாய் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

167. சக்றாத்து வேளையினில் கலிமாவை
சஞ்சீவியாக்கியருள் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

168. கப்றுக்குழியதனை குர்ஆன் பொருட்டால்
ஒளிமயமாக்கியருள் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
169. நாளை மறுமையினில் எங்களை
நபிமாருடன் சேர்த்தருள்வாய் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
170. மறுமையில் உன் சுவனப்பிர்தௌஸில்
உரிமையைத் தந்தருள்வாய் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
171. உன் திருலிகா தரிசனத்தை என்றென்றும்
உரித்தாக்கி வைத்தருள்வாய் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
172. மறுமை ஷபாஅத்தினில் நபியை
மன்றுடச் செய்தருள்வாய் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
173. ஹவ்ழுல் கௌதரினில் நபிகள்
அருள்புனல் ஈகச்செய்வீர் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
174. லிவாவுல் ஹம்ததனின் நிழலில்
நித்தியம் ஆக்கியருள் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
175. ஸல்ஸபீல், தஸ்னீம் எனும் பானங்களை
சலிக்காது புகட்டியருள் வஸல்லிம் (அல்லாஹும்ம ஸல்லி)
176. வரலாற்று ஏடதனைத் திருப்தியாய்
வலக்கரம் ஈந்தருள்வாய் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
177. தராஸூ நிறுவைதனில் குர்ஆன் பொருட்டால்
தகைமையாக்கியருள் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
178. அண்ணல் நபி பொருட்டால் சிறுத்தில்
மின்வேகமாய் நடாத்தியருள் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
179. நபிமார், றசூல்மாருடன் சுவனத்தில்
நடமாட அருள்புரிவாய் வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)
180. ஸல்லல்லாஹு அலாமுஹம்மத்
வஆலி, வஸஹ்பி வஸல்லிம். (அல்லாஹும்ம ஸல்லி)

குர்ஆன் வரலாற்றுச் ஸலவாத்து
முற்றிற்று.

ஆக்கியோன்:

மௌலவீ எம். ஏ. மக்பூல்
நிந்தவூர் 1
1404 றபீஉல் அவ்வல் 7
1983-12-12

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பாடத்தின் இலக்கம் | அறபிச் சொற்கள் | | விளக்கம் |
|---|---|---|---|
| 14. | யெதீம் | ... | தாய், தந்தை இழந்தவர். |
| 23. | உம்மிய்யீ | ... | எழுத, வாசிக்கத் தெரியாதவர். |
| 30. | அலக்சூறு | ... | இக்றஃ சூறு. |
| 35. | முர்ஸல் | ... | தீர்க்கதரிசி. |
| 39. | முஹாசூறு | ... | சூறத்து வழ்முஹா. |
| 46. | புறுக் | ... | மின்னல்வேகப் பிராணி. |
| 50. | மிஃறுஜ் | ... | விண்யாத்திரை. |
| 57. | யத்ரிப் | ... | மதீனு நகரம். |
| 61. | மக்கிய்யா | ... | மக்காவில் அருளியது. |
| 62. | மதனிய்யா | ... | மதீனுவில் அருளியது. |
| 74. | ஜுசு | ... | குர்ஆன் முப்பதில் ஒரு பகுதி 1/30. |
| 75. | மன்ஸில் | ... | குர்ஆனில் ஏழில் ஒரு பகுதி 1/7. |
| 77. | றுகூஃஉ | ... | குர்ஆனில் ஐன் ஆயத்து. |
| 79. | ஸுமுன் | ... | ஒருஜுசுவில் எட்டில் ஒருபகுதி 1/8 |
| ,, | றுப்உ | ... | ஒருஜுசுவில் நாலில் ஒரு பகுதி 1/4 |
| 83. | நிஸ்பு | ... | ஒருஜுசுவில் சரிபாதி 1/2. |
| 84. | கலிமா | ... | பூரண கருத்துள்ள வாக்கியம். |
| 85. | ஹர்புகள் | ... | அட்சரங்கள், (எழுத்துக்கள்) |
| 86. | அகர உயிர்க்குறி | ... | ـَ பத்ஹத்து, (சவர்). |
| 87. | இகர உயிர்க்குறி | ... | கஸ்றத்து ـِ (சேர்). |
| 88. | உகர உயிர்க்குறி | ... | ழம்மத்து ـُ (பேஸ்). |
| 89. | அழுத்தல் குறியீடு | ... | ஷத்து ـّ (சுருக்கெழுத்து). |
| 90. | நீட்டல் குறியீடு | ... | மத்து ـٓ மூன்றுவித மத்து. |
| 91. | நுக்தா | ... | எழுத்தில் உள்ள குத்து. |
| 92. | திலாவத்துஸ் ஸஜதா | ... | ஓதும்போது சுஜுது நேர்படல். |
| 93. | இத்திபாக்குஸ் ஸஜதா | ... | இமாம்களின் ஏகோபித்த முடிவு. |
| 94. | இஹ்திலாபுஸ் ஸஜதா | ... | இமாம்களிடம் விதர்ப்பம். |
| 96. | சூறத்துஸ்ஸாது | ... | ஸாது சூறு. |
| 102. | சூறத்துல் பாத்திஹா | ... | அர்ஹம்து சூறு. |
| 107. | உழூ | ... | அங்கசுத்தி. |
| 108. | பர்ளு | ... | கட்டாயக் கடமை. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பாடத்தின் இலக்கம் | அறபிச் சொற்கள் | | விளக்கம் |
|---|---|---|---|
| 112. | அல்கிதாப் | ... | சட்டப் புத்தகம். |
| ,, | அல்குர்ஆன் | ... | பரிசுத்த வேதம். |
| ,, | அல்பயான் | ... | விவரித்தல். |
| ,, | அல்புர்கான் | ... | உண்மை, பொய்யைப் பிரித்து விவரித்தல். |
| ,, | அல்ஹக்கு | ... | உண்மையானது. |
| 113. | அஃதிக்று | ... | ஞாபகப்படுத்தல். |
| ,, | அந்நூறு | ... | பிரகாசமானது. |
| ,, | அல்ஹகீம் | ... | உறுதியானது. |
| ,, | அல்கரீம் | ... | சங்கையானது. |
| ,, | அல்முகர்றமா | ... | சங்கையாக்கப்பட்டது. |
| 114. | அல்முபீன் | ... | தெளிவானது. |
| ,, | அல்முஸத்திக் | ... | உண்மையாக்குவது. |
| ,, | அல்புர்ஹான் | ... | ஆதாரமானது. |
| ,, | அல்ஹுதா | ... | நேரானது. |
| ,, | அஷ்ஷிபா | ... | சுகமாக்குவது. |
| 115. | அல்கையூம் | ... | நிலையானது. |
| ,, | அல்முஹைமின் | ... | பாதுகாப்பானது. |
| ,, | அந்நிஃமத் | ... | ஆசீர்வாதமானது. |
| ,, | அர்றூஹு | ... | ஆத்மீகமானது. |
| ,, | அத்தன்ஸில் | ... | இறங்கியது. |
| 116. | அல்ஹுக்மு | ... | தீர்ப்பானது. |
| ,, | அல்முபாறக் | ... | செல்வமானது. |
| ,, | அல்மஜீத் | ... | மேலானது. |
| ,, | அர்றஹ்மத்து | ... | கருணையானது. |
| ,, | அல்மௌயிழா | ... | புத்திமதி புகட்டுவது. |
| 117. | அல்பஷீர் | ... | நல்மாராங் கூறுவது. |
| ,, | அந்நதீர் | ... | எச்சரிப்பது. |
| ,, | அல் அறபி | ... | அறபிப் பாஷையானது. |
| ,, | அல் அஸீஸ் | .. | கண்ணியமானது. |
| ,, | அல் முதஹ்ஹறு | ... | பரிசுத்தமானது. |
| 118. | அல்மர்பூஆ | ... | சிரேஷ்டமானது. |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| பாட்டின் இலக்கம் | அறபிச் சொற்கள் | | விளக்கம் |
|---|---|---|---|
| 118, | அஃதிக்ரு | ... | பிரசித்தியானது. |
| ,, | அல்பஸாயிர் | ... | துலாம்பரமானது. |
| ,, | அல் அஜப் | ... | அற்புதமானது. |
| ,, | அல் ஹிக்மா | ... | புத்தி கூறுவது. |
| ,, | ஹப்லுல்லாஹ் | ... | அல்லாஹ்வின் அறுதிமானம். |
| 143. | ஷபாஅத்து | ... | சிபார்ஸு |
| 149. | குர்ஆன் தமாம் | ... | குர்ஆன் பூருக ஓதி முடித்தல். |
| 153. | சூறத்துல் இஹ்லாஸ் | ... | சூறத்து குல்ஹு-வல்லாஹு-அஹத் |
| 167. | சக்ருத்து வேளை | ... | மரணத்தறுவாய். |
| 171. | லிகா | ... | மறுமைத் தரிசனம் |
| 172. | ஷபாஅத்து | ... | பரிந்து பேசல். |
| 173. | ஹவுழுல் கௌதர் | ... | நீர்த்தடாகம். |
| 175. | ஸல்ஸபீல், தஸ்னீம். | ... | இருவித பானங்கள். |
| 176. | வரலாற்று ஏடு | ... | பட்டோலை. |
| 178. | ஸிருத் | ... | சிருத்தெனும் பாலம். |

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முஸ்லிம்களுக்குத் தேவையான பல
அம்சங்கள் பொருந்திய
1985-ம் ஆண்டுக்குரிய
வர்ண முஸ்லிம் கலண்டர், ஒபிஸ் கலண்டர்
பெரியது (18 x 22), சிறியது (11 x 9)
தங்களுக்குத் தேவைப்படும்போது
முன்கூட்டியே தொடர்புகொள்ளவும்.

மேலும் தங்களுக்குத் தேவையான

அழைப்பிதழ்கள்,
பல வர்ணங்களில் லேபல்கள்,
புத்தகங்கள் முதலியன

மிக அழகாகவும் – நேர்த்தியாகவும்
குறிப்பிட்ட நேரத்தில் செய்து கொடுக்கப்படும்

# பசிபிக் அச்சகம்

267, ஆட்டுப்பட்டித் தெரு,
கொழும்பு - 13.

தொலைபேசி { 546507, 31588

அச்சுப் பதிவு: பசிபிக் அச்சகம் * 267, ஆட்டுப்பட்டித் தெரு * கொழும்பு 13.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org